THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

EIGHTH SESSION OF THE THIRD LEGISLATIVE ASSEMBLY UNDER THE CONSTITUTION OF INDIA.

Friday, 28th January 1966.

The House met in the Assembly Chamber, Fort St. George, at two of the clock, Mr. Speaker (THE HON. SRI S. CHELLAPANDIAN) in the Chair.

[*Note.*—An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.]

I.—CONDOLENCE RESOLUTION ON THE DEMISE OF SRI LAL BAHADUR SHASTRI, LATE PRIME MINISTER OF INDIA.

MR. SPEAKER : It is my most melancholy duty to refer to the sad and sudden demise of Sri Lal Bahadur Shastri, late Prime Minister of India, on the 11th January 1966 at Tashkent, at a critical juncture in the history of our nation. The Hon. Leader of the House will move the condolence resolution.

* **கனம் திரு. எம். பக்தவத்சலம்** : கனம் சபாநாயகர் அவர்களே, பின்வரும் தீர்மானத்தை நான் பிரேரேபிக்கின்றேன்—

"இசைவும், ஏற்றமும் இணைந்த நல்லுறவை நாடும் பணியிலே டாஷ்கண்ட் நகரில் நம் நாட்டின் முன்னாள் பிரதமர் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள், 1966-ம் ஆண்டு ஜனவரி மாதம் பதினொன்றாம் தேதியில், ஊழின் வலியால் உற்ற திடீர் மரணம் குறித்து இம் மன்றம் தனது ஆழ்ந்த மனக் கவலையையும், ஆறாத் துயரத்தையும் தெரிவித்துக் கொள்கிறது. ஆக்கிரமிப்புக்கு எதிரான போரிலே அவர் நம் நாட்டுக்கு வெற்றியை ஈட்டி, விரத்தை நிலை நாட்டினார்; அதன்பின், அமைதியிலே நாட்டின் பெருமையை அவர் காத்தார். இந்த மேதகு முயற்சியில் அவர் தம் உயிரையே அர்ப்பணித்து ஒப்பற்ற தியாகியானார். அமைதியான நல்லுறவை, அடைவதற்கென்ற முயற்சியிலே, இன்னுயிர் தன்னை ஈந்தவராய், இறவாப் புகழும் பெற்றுவிட்டார். அவர் வாழ்விலே பெற்றது பெருஞ் சிறப்பு; மறைவிலே உற்றது மாபெருஞ் சிறப்பு. அவரது புனித நினைவைப் போற்றும் வகையால், எவ்வாறு நம் நாட்டின் வளமைக்கும், பெருமைக்கும் என்று அவர் வாழ்ந்து மறைந்தாரோ, அவ்வாறே நாமும் நாட்டின் தன்னலமற்ற சேவைக்கென மீண்டும் நம்மை அர்ப்பணித்துக் கொள்வோமாக.

அவரது பத்தினியார், திருமதி லலிதா சாஸ்திரி அவர்களுக்கும், வருந்தி நிற்கும் அவர் குடும்பத்தினருக்கும் இம் மன்றம் தனது வருத்தத்தைத் தெரிவித்துக் கொள்கின்றது."

நம் நாட்டைச் சீரிய வகையில் தலைமை வகித்து நடத்திச் சென்ற, பல்லாண்டுகளாகச் சுதந்திரப் போராட்டத்திலே நமக்கு வழி காட்டி நம்மை நடத்திச் சென்ற, சுதந்திரம் அடைந்த பிறகும் சீரிய வகையிலே ஆட்சிப் பொறுப்பை ஏற்று, மக்களுடைய முன்னேற்றத்திலேயே ஈடுபட்டு, அதற்குரிய திட்டங்

English version of Resolution printed as Appendix X on page 29.

களை உருவாக்கி நிறைவேற்றுவதற்கு வழி வகுத்த சிறந்த தலைவர், உலகத்தின் நன்மதிப்பைப் பெற்ற தலைவர் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்கள், 19 மாதங்களுக்கு முன்பு திடீரென்று மறைந்தார் என்ற செய்தியைக் கேட்டபொழுது நாமெல்லோரும் மிகுந்த துக்கத்தில் ஆழ்ந்தோம். அத்தகைய ஒரு சிறந்த தலைவரை நாம் இழந்துவிட்டோமே, அத்தகைய தலைமை மீண்டும் நமக்குக் கிடைக்குமா, நாட்டில் பல பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டியிருக்கின்றனவே என்று நாம் ஏங்கி நின்றோம். ஆனால், அதிலே சிந்தனை செலுத்திய, அநேகமாக எல்லோருடைய மனதும் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களிடத்திலேதான் சென்றது. ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்கள்தான், ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களைப் பின்பற்றக்கூடிய ஒப்புயர்வற்ற தலைவர், அவர்தான் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களுடைய பரிபூரணமான நம்பிக்கையைப் பெற்றவர், அவர்தான் ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களுடைய கொள்கைகளிலே பரிபூரணமான நம்பிக்கை உள்ளவர், அவர்தான் நமக்குச் சிறந்த தலைவர் என்று பலரும் நினைத்தார்கள். அவ்வாறே ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். 18 மாதங்களாகப் பிரதம மந்திரியாக இருந்து அவர் ஆட்சி செலுத்திக்கொண்டு வந்தார். ஆனால், இந்தக் குறுகிய காலத்திலேயே மக்களுடைய நன்மதிப்பை அவர் பெரிதும் பெற்றுவிட்டார். இந்த நாட்டு மக்களுடைய நன்மதிப்பை மட்டுமல்ல, உலகத்தின் நன்மதிப்பையும் பெற்று அவர் மறைந்ததிலே இந்த உலகமே துக்கத்தில் ஆழ்ந்திருக்கக்கூடிய நிலையை நாம் காண்கின்றோம். அவருடைய குடும்பத்தினருக்கு ஏற்பட்ட இந்தத் துக்கத்தை நாமெல்லோரும் பகிர்ந்து கொள்ளுகிறோம் என்றால், இந்த நாட்டு மக்களாகிய நாம் படும் துயரத்தை உலகமே பகிர்ந்து கொள்ளக் கூடிய வகையில் உலகமே இதிலே மிகுந்த அனுதாபத்தைத் தெரிவித்திருக்கிறது. உலகம், ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய அருமை பெருமைகளை உணர்ந்து பாராட்டியிருக்கிறது என்பதை நாம் உணர்கிறோம். உலகமே பாராட்டத்தக்க சீரிய வகையில் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் வழிகாட்டினார்கள். அவர் ஆட்சிப் பொறுப்பில் இருந்த 18 மாதங்களுக்குள் 18 ஆண்டுகளில் ஏற்படக்கூடிய மகத்தான பிரச்சினைகளெல்லாம் ஏற்பட்டன. என்றாலும், அவர்கள் உறுதியோடும் நம்பிக்கையோடும் நின்று சிறந்த வழியைக் காட்டிக் கொண்டு வந்தார்கள்.

இவ்வளவு பெரிய தலைவராக விளங்கிய ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் வறுமையில்தான் பிறந்து வாழ்ந்தார். ஆனால், சிறு வயதிலேயே நாட்டின் விடுதலையில் நாட்டம் கொண்டிருந்தார். விடுதலைப் போராட்டத்தில் மகாத்மா காந்தியடிகளுடைய தலைமையிலே, பரிபூரணமான நம்பிக்கையுடன் ஈடுபட்டார். ஸ்ரீ ஜவஹர்லால் நேரு அவர்களுடைய தலைமையும், அவர்களுடைய வழியும் அவருக்குப் பக்கபலமாக நின்றது. அவ்வாறு தொடர்ந்து சுதந்தரப் போராட்டத்தில் பெரும் பங்கு எடுத்துக் கொண்ட ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களை, சுதந்திரம் அடைந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பும் தேடி வந்தது என்று கூறினேன். உத்தரப் பிரதேச மாநில ஆட்சியில்

முக்கியமான பொறுப்பை அவர் வகித்துக் கொண்டு வந்தார். ஆனால், அப்படி மந்திரி பதவி வகித்துக் கொண்டு வந்த சமயத்திலே, காங்கிரஸ் ஸ்தாபனத்தில் அவர் பணியை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டபோது, அவர் சிறிதும் தயங்காமல் மந்திரி பதவியை விட்டுவிட்டு, அகில இந்திய காங்கிரஸ் காரியதரிசியாகப் பணியாற்றி மகத்தான சேவை புரிந்தார் என்பது நம்மில் அநேகருக்குத் தெரியும். எத்தனையோ காரியதரிசிகள் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள், ஆண்டுதோறும் அல்லது இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை காரியதரிசிகள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஆனால் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களைப் பொறுத்த மட்டில் பதவியை வகித்தாலும் சரி, வகிக்காவிட்டாலும் சரி, காங்கிரஸ் ஸ்தாபனத்தின் முக்கிய உறுப்பினராக இருந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி, காரியதரிசியாக இருந்தாலும் சரி, சாதாரண உறுப்பினராக இருந்தாலும் சரி, அகில இந்தியாவிலும் உள்ள காங்கிரஸ் ஊழியர்கள் ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களையே நாடி வந்தார்கள்; அவர்களிடத்திலே வந்துதான் யோசனை கேட்பார்கள். சில நாட்களுக்கு முன்பு நம்முடைய பிரதம மந்திரி ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் கூறியதைத் தாங்களும் கவனித்திருப்பீர்கள். "எனக்கு ஏதாவது ஒரு பிரச்சினை வந்தால், என்னுடைய தந்தையார் இருந்தபோது கூட, ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய யோசனையைத்தான் நான் கேட்பேன்" என்று ஸ்ரீமதி இந்திரா காந்தி அவர்கள் கூறிய வாசகம் பத்திரிகையில் வெளிவந்திருந்தது. அதைத் தாங்களும் கவனித்திருப்பீர்கள். அவ்வாறு எல்லோருக்கும் ஏழை எளியவர்களுக்கும் கூட உற்ற நண்பராக இருந்தார் ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் என்பதை அவரைக் காணச் சென்றவர்கள் கவனித்திருப்பார்கள். எப்பொழுது சென்றாலும், ஏராளமான ஏழை எளிய மக்களுடைய கூட்டம் தான் அவர்களைச் சூழ்ந்து கொண்டிருக்கும். இரவு, பகல் என்று பாராமல் அவர்கள் தொடர்ந்து தொண்டாற்றிக் கொண்டு வந்தார்கள். அமைச்சராக இருந்தாலும் சரி, அமைச்சராக இல்லாவிட்டாலும் சரி, எப்பொழுதும் அவர்களுடைய யோசனையை மக்கள் நாடி வந்தார்கள்.

மத்திய ஆட்சியிலே பொறுப்பு ஏற்று, சீரிய வகையிலே நடத்திக்கொண்டு வந்தபோது கூட, குறிப்பிட்ட ஒரு பொறுப்பை வகிக்கும்போதும், வேறு எந்தத் துறையைப் பற்றியதாக இருந்தாலும், ஆட்சியைப் பற்றியதாக இருந்தாலும், மற்ற ஸ்தாபனங்களைப் பற்றியதாக இருந்தாலும், ஸ்ரீ சாஸ்திரி அவர்களைத்தான் பலரும் நாடிச் செல்வார்கள். அவர்களுடைய யோசனையைக் கேட்பதற்கும், அவர்களுடைய உதவியை நாடுவதற்கும் செல்லுவார்கள். ஆனால், ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் அடக்கமே உருவாகக் கொண்டவர். மக்கள் அவரிடத்தில் பரிபூரணமான நம்பிக்கை வைத்திருந்தார்கள்.

ஸ்ரீ லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் நம் நாட்டின் பிரதம மந்திரியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவுடன் எதிர்பாராத பல பிரச்சினைகள், புதிய பிரச்னைகள் எல்லாம் ஏற்பட்டன. நம் நாட்டு

எல்லையில் பாகிஸ்தான் ஆக்கிரமித்தபோது, மிகவும் கவலையளிக்கக் கூடிய போர் நிலை ஏற்பட்டது. ஆனால், ஸ்ரீ சாஸ்திரி அவர்கள் சிறிதும் மனம் தளரவில்லை. அவர்கள் சிறந்த வழியைக் காட்டினார்கள். தகுந்த முடிவை எடுப்பதிலே சிறிதும் தயங்கவில்லை. அவர் அடக்கமே உருவாகக் கொண்டவர். அதுமட்டும் அல்ல. காந்திஜி அவர்களுடைய பரம்பரையை ஒட்டி, நேருஜி அவர்களுடைய பரம்பரையை ஒட்டி அவர்களது கொள்கைகளிலே, அவர்களது வழிகளிலேயே நாட்டிற்கு நல்ல வழியைக் காட்டிச் சென்றார்கள். என்றாலும், இவருக்கே உரித்தான முறையில் எந்தப் பிரச்னையையும் தீர்க்கமாகச் சிந்தித்து, நாட்டிற்கு நலனளிக்கும் வகையில் தம் முடிவை உறுதியாகப் பின்பற்றி செயலாற்றி வந்த அருமை பெருமைகளை நாம் உணர்வோம். திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களிடத்தில் இந்த நாட்டு மக்கள் வைத்திருந்த அன்பையும், மதிப்பையும் நாம் அறிவோம். அவர் எல்லோருடைய அன்பையும், மதிப்பையும் தம்முடைய உயர்ந்த பண்பினாலே, உறுதியான செயல்முறையினாலே பெற்றார்கள். அவர்கள் பிரதம மந்திரியாக இருந்தபோது இதனைக் கண்டோம். அவர்கள் அளித்த ஊக்கம்தான் மக்களுக்கும் சரி, இராணுவ வீரர்களுக்கும் சரி, கிஸான்களுக்கும் சரி இடையறாது, ஊக்கம் குன்றாது தேச நலனுக்காக உழைக்கின்ற பெருஞ் சக்தியை அளித்து வந்தது. அவர்கள் அளித்த ஊக்கத்தினால் தான் நமது ஜவான்கள் நம் தேசத்தின் பெருமையை நிலைநாட்டினார்கள். கடந்த செப்டம்பர் மாதம் நமக்கு மகத்தான வெற்றியைப் பெற்றுத் தந்தார்கள். அப்படிப் போர் என்ற நிலையில் உறுதியாக நின்று நமக்கு வெற்றிக்கு மேல் வெற்றி வாங்கித் தந்த திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் தாம் சமாதானம் என்ற உடனே போரை நிறுத்த ஒப்புக்கொண்டு இந்த நாடு தன் அண்டை நாட்டுடன் என்றென்றும் சமாதானமாக வாழ்ந்து முன்னேற்றம் அடைவதற்கான வழியைக் காண டாஷ்கண்டிலே பேச்சுவார்த்தை நடத்தி வெற்றிகண்டார்கள். அத்தகைய ஒப்புயர்வற்ற தலைவர் உலகத்தாரின் பெருமதிப்புக்கு உரியவரானார் என்பதில் ஆச்சரியமில்லை. அவருடைய மறைவு உலகத்தார் அனைவரையும் துக்கத்தில் ஆழ்த்திற்று என்பதிலும் வியப்பில்லை. ஆனால் நிலைமையை அப்போதைக்கப்போது நாம் சமாளிக்க வேண்டியிருக்கிறது. சமாளித்தும் இருக்கிறோம். மீண்டும் ஒரு பிரதமரை இந்தியப் பேரரசின் தலைவராக அமைத்துக் கொண்டிருக்கிறோம். இதையும் பாரத நாட்டு மக்கள் மட்டும் அல்லாமல் உலகமே வரவேற்கிறது. புதிய பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி அவர்களும் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, லால் பகதூர் சாஸ்திரி ஆகியவர்களின் வழியைப் பின்பற்றுகிறவர்கள். அவ்வாறு தாம் பின்பற்றப் போவதாகவும் அவர்கள் உறுதி கூறியிருக்கிறார்கள். அவர்களுக்கு இந்த நாடு பரிபூரணமான ஒத்துழைப்பை அளிக்கும் என்பதில் ஐயமில்லை.

திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் மிக உயர்ந்த நிலையை அடைந்தார்கள் என்பது மட்டும் அல்ல, அவரது தலைமையில் நம் நாடே உலகத்தில் பெருமைப்படக்கூடிய அளவிற்கு மிக உயர்ந்த

நிலையை அடைந்திருக்கிறது. அதைப் பாதுகாத்துக் கொண்டு மேன்மேலும் அதை வளர்த்துக் கொள்ள உறுதி கொள்வது தான் நாம் சாஸ்திரி அவர்களுக்குச் செலுத்தக்கூடிய அஞ்சலியாகும். மிக உயர்ந்த நிலையில் இருந்த அவரது குடும்பம் இன்றைக்கு நிர்க்கதியான நிலையில் இருக்கிறது. அப்படி இருப்பதற்காக அவர்கள் குடும்பத்தில் உள்ளவர்கள் யாரும் பொருட்படுத்தவில்லை. திரு. லால் பகதூர் சாஸ்திரி குடும்பம் என்பதற்கு ஏற்றவகையில்தான் அவரது குடும்பத்தில் உள்ளவர்கள் யாவரும் இந்த நாடு நன்றாக இருக்க வேண்டும், பெருமையோடு முன்னேற்றம் அடைய வேண்டும், மக்கள் எல்லோரும் இன்புற்று வாழ வேண்டும் என்று நினைக்கிறார்கள். அத்தகைய ஒரு ஒப்புயர்வற்ற குடும்பத்தினருக்கு இந்தத் தமிழ்நாட்டு மக்கள் இன்றைக்கு தம்முடைய ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறார்கள்.

திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் இந்நாட்டிற்கு வழி காட்டிய நெறியில் நாம் செல்லவேண்டும், நம் பிரச்சினைகளை கௌரவமாக, சமாதான முறையில் தீர்த்துக் கொள்வதற்கு பணியாற்றவேண்டும், எல்லோரும் இன்புற்று, குறையற வாழக்கூடிய முறைகளில் செயலாற்றவேண்டும் என்பதாக இந்த நேரத்தில் நாம் உறுதி கொள்வது ஒன்றுதான் நாம் அவருக்குச் செலுத்தக் கூடிய சிறந்த அஞ்சலி என்று தெரிவித்துக் கொண்டு என் வார்த்தைகளை முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் அவைத் தலைவர் அவர்களே, இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர் திரு. லால் பகதூர் சாஸ்திரியின் மறைவு குறித்து, இந்த அவையின் முதல்வர் கொண்டு வந்துள்ள அனுதாபத் தீர்மானத்தைப் பொதுவாக எதிர்கட்சிகளின் சார்பாகவும், குறிப்பாகத் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும் நான் ஆதரிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய பேரிழப்பு எவ்வளவு ஆற்றொணு துயரத்தையும், துக்கத்தையும் இந்தியப் பெருங்குடி மக்களுக்கு மட்டுமல்லாமல், அகில உலகத்திலும் ஜனநாயகத்தில் பற்றுக்கொண்டிருப்பவர்களுக்கு எல்லாம் ஏற்படுத்தியது என்பதை நாம் நன்கு உணர்வோம். கருத்து வேறுபாடுடைய மாற்றுக் கட்சியினர்களும் மதிக்கக் கூடிய அளவிற்கு சிறந்த பண்பாடுடையவர் அவர். சிறந்த உறுதிப்பாடு கொண்டவர் அவர். இப்படிப் பல்வகையாலும் இந்திய நாட்டு மக்களுடைய பெருமதிப்பையும், பாராட்டுதலையும் பெற்ற அவர் நாட்டின் நிலையான வாழ்வுக்கு டாஷ்கண்டில் அமைதிக்கான உடன்பாடு செய்து முடித்தார் என்ற செய்தியை நாம் அறிந்து மகிழ்வதற்குள் அவர் மறைந்தார் என்ற செய்தி நம் நெஞ்சை எல்லாம் உருக்கிவிட்டது.

டாஷ்கண்ட் மகாநாட்டினுல் எத்தகைய உடன்பாடு ஏற்படும் என்பதை இந்திய பெருங்குடி மக்கள் மட்டுமல்லாமல் உலகமே பேராவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தபோது, அவர்களுக்கு ஏற்பட்ட சாவே முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக

அமைந்துவிட்டது. எதிர் காலத்தில், இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்கும் இடையிலே இருந்த மனக் கசப்பு மாறுமா? இன்னும் அதிக அளவில் தான் மூளுமா? இந்தியத் துணைகண்டத்தில் அமைதி நிலவுமா? அல்லது இங்கே மூளுகின்ற போர் ஆசியாக் கண்டத்தின் அமைதியைக் குலைத்து உலகப் போராக மூண்டு விடுமா? போர் தொடர்ந்து நடைபெறுவதானல் இந்த நாடு இன்னும் எத்தனை உயிர்களை இழக்க வேண்டியிருக்குமோ? இருக்கும் வருவாயை எல்லாம் போர்ப்பணியிலே செலவிட்டு நாட்டின் பொருளாதார வாழ்வு சீர்குலைந்துவிடுமோ? என்பதாகவெல்லாம் அச்சமும், பதட்டமும் கொண்டு--டாஷ்கண்டு பேச்சு வார்த்தைகள் முறிந்துவிடும் நிலையில் இருப்பதாகக் கேட்டு அவநம்பிக்கையுற்று—அதன் முடிவு என்னவாக இருக்கும் என்று ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருந்த நேரத்தில்--பகை நீங்கு சிற அளவிற்கான நல்வாழ்வின் தோற்றத்திற்கு அடிகோலிடும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த உடன்பாட்டின் செய்தியை உலக மக்கள் அறிந்து மகிழ்வதற்குள்ளாக, இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர் மறைந்த செய்தி வந்ததானது உலகத்தையே நெக்குருகச் செய்தது என்பதை நாம் நன்ருக உணர்கிறேம்.

பதினெட்டு ஆண்டு காலமாகத் தீர்க்கப்படாமல் இருந்து வருகிற காஷ்மீர் பிரச்சினையை டாஷ்கண்டு உடன்பாடு தீர்த்து வைத்து விட்டது என்று சொல்லவில்லை. அப்பிரச்சினைக்கு உடனடியாக ஒரு முடிவு ஏற்பட்டு விட்டது என்று சொல்லவில்லை. என்றாலும்—எந்தப் பிரச்சினை ஆகட்டும் அதைப் போர்மூலமே தான் தீர்த்துக் கொள்ளவேண்டும்—துப்பாக்கிக்குத் துப்பாக்கி என்பதாக இரு நாடும் தங்கள்தங்கள் போர்ச்சாதனங்களை எல்லாம் எல்லையில் குவித்து வைத்துக்கொண்டு அமைதியற்ற நிலையில் வாழ்வதை மாற்றி—பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்த்துக்கொள்ள ஒரு முன்னேடியாக அந்த உடன்பாடு அமைந்திருக்கிறது. பதட்ட நிலை தணிந்து அமைதியை நிலையாகத் தோற்றுவிப்பதற்கு அடிப்படையாக அமைந்த வரலாற்று முக்கியத்துவம் பெற்ற டாஷ்கண்டு மகாநாட்டின் உடன்பாடு வெளிவருவதற்குள் நமது இந்தியப் பேரரசின் தலைமை அமைச்சர் மறைவைப் பற்றிய செய்தி உலகையே திடுக்கிட வைத்தது. மிக்க மகிழ்ச்சியோடு டாஷ்கண்டில் இருந்து திரும்புகிற திரு. லால் பகதூர் சாஸ்திரிக்கு இந்தியப் பெருங்குடி மக்கள் மலர் சொரிந்து வரவேற்பு அளிக்கக் காத்திருந்தபோது அவரது உயிரற்ற உடலைக் கண்ணீர் சிந்தி வரவேற்கும் நிலை ஏற்பட்டு விட்டது.

அவர் மதிக்கத்தக்க பல மாண்புகளுக்கு எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதை முதலமைச்சர் அவர்கள் தம்முடைய உரையிலே தெளிவுபட எடுத்துக் கூறினர்கள். அரசியலிலே வாழ்ந்துகொண்டிருக்கின்ற பலருக்கு நல்லதொரு இலக்கணமாக அவர் திகழ்ந்தார். ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தி வந்தார்; படாடோபமற்ற வாழ்க்கையை நடத்தினர்; பதவி வந்தாலும் சரி, பதவியை விட்டுச் சென்றாலும் சரி ஒரே

28th January 1966] [திரு. இரா. நெடுஞ்செழியன்]

நிலையிலேயே தனது வாழ்க்கையை நடத்தி வந்தார். உள்ளத்திலே உறுதி கொண்டவராகத் திகழ்ந்தார். இந்தியாவுக்கும், பாகிஸ்தானுக்குமிடையே போர் நடந்து கொண்டிருந்தபொழுது, அவர் உலக அரங்கிலே உள்ள பேரரசுகள், இந்தியாவைப் பொறுத்து கொண்டிருந்த மதிப்பை வளர்க்கச் செய்கின்ற உறுதியைக் கடைப்பிடித்தார். உலகத்திலே இந்தியாவை மதிக்காத பிற நாடுகள் எல்லாம்கூட வியக்கத்தக்க அளவிலே, இந்த மண்ணைக் காப்போம்; மண்ணோடு தோய்ந்த மானத்தைக் காப்போம். மானத்தைக் காக்கக் காரணமாக இருக்கின்ற ஜனநாயகத்தைக் காப்போம் என்ற முறையிலே அவர் எடுத்துக் கொண்ட திட்டவட்டமான முடிவுகள், உலக அரங்கிலே இந்தியாவினுடைய மதிப்பை வளர்க்கத்தக்கனவாய் அமைந்தன. அவர் சிறந்த நற்பண்புகளுக்கு உருவாய் விளங்கினார். அமைச்சரவையிலே அமைச்சராக இருந்த பொழுதும், ஆடம்பரமற்ற தன்மையிலே, அரசியல் திண்மைக்கும், பண்புக்கும் எடுத்துக்காட்டாய் விளங்கினார். கருத்து மாறுபட்ட மாற்றுக் கட்சியினர்கூட அவருடைய திண்மையையும், பண்பையும் போற்றத்தக்க அளவிலே வாழ்ந்தார்.

இரயில்வே இலாகாவின் அமைச்சராக அவர் இருந்தபொழுது அரியலூரிலே விபத்து ஏற்பட்டதன் காரணமாக நூற்றுக்கணக்கான உயிர்கள் இழக்கப்பட்டன. அந்த நேரத்தில் அந்தச் சம்பவம் தனக்கு மிகுந்த வேதனையைத் தரக்கூடியதாக இருக்கிறது என்பதை அடிப்படைக் காரணமாகக் காட்டி தன்னுடைய பதவியை ராஜிநாமாச் செய்தார் என்பதும், ராஜிநாமாச் செய்துவிட்டு வீட்டுக்கு வரும்பொழுது, அரசாங்கக் காரைப் பயன்படுத்தாமல், பஸ்ஸிலே தான் வீட்டுக்கு வந்தார் என்பதும் நமது உள்ளத்தைத் தொடுவனவாகும். உயர்ந்த அரசியல் பண்பும், ஆடம்பரமற்ற முறையிலே உறுதியையும், விடாமுயற்சியையும் கொண்டு விளங்கி அரசியலிலே அவர் ஒரு எடுத்துக்காட்டாக விளங்கினார் என்று எல்லோராலும் போற்றத்தக்க அளவிலே அவர் வாழ்ந்து காட்டினார்.

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து,"

என்ற வள்ளுவர் வாக்கிற்கு இலக்கணமாய், எடுத்துக்காட்டாய் அவர் விளங்கினார். உருண்டோடுகின்ற தேரிலே பொலிவில்லாத இடத்திலே சிறிய அளவிலே அச்சாணி அமைந்திருந்தாலும் அது உருண்டோடுகின்ற தேரைத் தாங்கிச் செல்கின்ற காரணத்தால் மிக இன்றியமையாததாக அமைந்திருக்கின்றது. மனித சமுதாயத்திலும் மிகச் சாதாரணமானவர்களாக இருப்பார்கள், அவர்கள் செய்து முடிக்கின்ற செயல்கள் மிகப் பெரிய செயல்களாய் இருக்கும். ஆகவே,

"உருவுகண் டெள்ளாமை வேண்டும் உருள்பெருந் தேர்க்
கச்சாணி யன்னார் உடைத்து,"

என்ற வள்ளுவர் குறளுக்கு இலக்கணமாய், எடுத்துக்காட்டாய் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் அமைந்திருந்தார்கள் என்பதை நான் நினைவுபடுத்துகிறேன். இவ்வளவு சிறப்புக்குரிய

பண்புகளைக் கொண்டிருந்த அவர், காந்தியார், நேரு போன்ற வர்கள் எத்தகைய சிறந்த பண்புகளைக் கொண்டிருந்தார்களோ, அத்தகைய சிறந்த பண்புகளுக்கு எல்லாம் எடுத்துக்காட்டாய்த் தன்னை ஆக்கிக்கொண்டு, பதினெட்டுத் திங்களிலே பாராட்டுதலைப் பெறுகின்ற அளவுக்கு அரசியலிலே ஆடம்பரமற்ற வாழ்க்கையை நடத்திக்கொண்டு வருகின்றபொழுது—"வெண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்தாற் போல்" என்பதுபோல்—பிரிந்து விட்டார்கள். இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே, தன்னுடைய உழைப்பு, அறிவு, ஆற்றல் இவைகளின்மூலம் நல்ல உறவு முறையை உருவாக்குவார் என்று எண்ணிக் கொண்டிருந்த நிலையில் அவர் மறைந்தது வருந்தக்கூடிய ஒரு நிகழ்ச்சியாகும். முதலமைச்சர் அவர்கள் கூறியதுபோல் அவ்வுருடைய சிறந்த பண்புகள், நல்ல நோக்கங்களை நிறைவேற்றுகின்ற தன்மை, இவை களை அவருடைய நினைவுகளாக நாம் எண்ணிப் பின்பற்றுவோமாக. அவருடைய திண்மையையும், ஆடம்பரமற்ற தன்மையையும், எடுத்துக் கொண்ட முயற்சிகளையும், மேற்கொண்ட உறுதியையும் நாம் நினைவிற்கொண்டு இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே பகைமை உணர்ச்சி ஏற்படாது, நல்ல உறவு ஏற்படக் கூடிய நிலையில் டாஷ்கண்ட் உடன்பாட்டை மேற்கொள்ள வேண்டும். மேலும் டாஷ்கண்ட் உடன்பாடு வரலாற்றில் அழியாச் சின்னமாக அமைந்திருக்கிறது. காந்தியார் கடைப்பிடித்த நல்ல பண்புகளையும், நேரு அவர்களுடைய கருத்துக்களையும் நோக்கங் களையும் கடைப்பிடித்து அவர் அமைதிக்காகப் பாடுபட்டார். இவ்வளவு சிறப்புக்களுக்கும் உரிய அவர் மறைந்தது கண்டு, அவருடைய துணைவியாருக்கும், குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்க்கும் வருத்தம் தெரிவிக்கும் முறையில் முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற தீர்மானத்தை ஆதரித்து அமர் கிறேன். வணக்கம்.

திரு. மீ. கலியாணசுந்தரம் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் முன் மொழிந்துள்ள இந்தத் தீர் மானத்தையும், அவர்கள் கூறிய கருத்துக்களையும் என்னுடைய சார்பிலேயும், என்னுடைய கட்சியின் சார்பிலேயும் நான் முழு மனதுடன் ஆதரிக்கிறேன். திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்கள் சண்டையில் வெற்றி கண்டார்கள். வெற்றி காண்பதற்கு உதவி செய்தார்கள். இந்தச் சண்டை நடந்தது வெற்றி காண்பதற்காக மட்டுமல்ல. பாகிஸ்தானை ஆக்கிரமிக்க வேண்டுமென்பதற்காகவோ அல்லது அடக்கவேண்டுமென்பதற்காகவோ அல்லது பாகிஸ்தான் இப்பொழுது வைத்திருக்கும் இந்தியாவின் ஒரு பகுதியை மீட்க வேண்டுமென்பதற்காகவோ அல்ல. சண்டை நடந்ததே கௌரவ மான சமாதானம் காண்பதற்கும், நிலையான சமாதானம் காண்ப தற்காகவும்தான். அவர் வெற்றி பெற்றதோடு விட்டிருந்தால் அவருடைய லட்சியம் முற்றுப்பெற்று இருப்பதாக ஆகாது. அதனால்தானோ என்னவோ அவருடைய உயிர் டாஷ்கண்ட் அறிக் கையில் கையெழுத்துப்போடும் வரையில் இருந்திருக்கிறது. அதன் பின்னர்தான் பிரிந்து இருக்கிறது. டாஷ்கண்ட் அறிக்கைபற்றிக் கேள்விப்பட்டபொழுது மிக மகிழ்ச்சியோடு இருந்தோம்.

28th January 1966] [திரு. மீ. கலியாணசுந்தரம்]

ஆனல், அதே சமயத்தில் இந்தமாதிரியான ஒரு செய்தி டாஷ்கண்ட் அறிக்கைக்குக் கர்த்தாவாக இருந்தவர் நம்மிடத்திலே இல்லை என்ற ஒரு வருத்தமான செய்தியும் வந்தது. இருப்பினும், திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்கு எப்பொழுதும் அழிவில்லை என்று தான் நாம் கருதவேண்டும். சரித்திரத்திலே அழியாத பெயரையும், மறையாத இடத்தையும் தேடிக்கொண்டு தான் அவர் நம்மிடமிருந்து போயிருக்கிருர் ; நல்ல ஒரு பரம்பரையை விட்டுவிட்டுத்தான் அவர் நம்மைவிட்டுப் போய் இருக்கிருர். ஆசியாவிலே, ஏன் உலகத்திலே இரண்டு நாடுகளுக்கும் இடையே தகராறுகள், சண்டைகள், பிரச்னைகள் ஏற்பட்டால் அவையெல்லாம் எப்படித் திர்க்கப்பட வேண்டும் என்பதற்கு உதாரணமாக இருக்கக்கூடிய அளவிலே ஒரு அறிக்கையைப் பூர்த்திசெய்து கொடுத்து, கையெழுத்தும் போட்டுவிட்டுப் போய் இருக்கிருர்கள். அறிக்கையில் கூறப்பட்டிருக்கின்றபடி, மேலும் இந்தியாவிற்கும், பாகிஸ்தானுக்கும் இடையே ஒற்றுமை வளர்வதற்கும் ஒற்றுமை துரிதமாக வளர முடியாவிட்டாலும் வேற்றுமைகள் வளராமல் இருப்பதற்காகவாவது இந்த அறிக்கையை நாம் பயன்படுத்துக் கொள்ள வேண்டும், அதற்கான அம்சங்கள் அந்த அறிக்கையிலே இருக்கின்றன. பாகிஸ்தானுக்கு இந்தியாவிற்கும் இடையே பகை உணர்ச்சி இருப்பது, பாகிஸ்தானுக்கும் நல்லதல்ல, இந்தியாவிற்கும் நல்லதல்ல. நல்லது என்று ரொம்ப முரட்டுத்தனம் படைத்தவர்கள் சொல்லிக்கொண்டு இருக்கலாம். இரண்டு நாடுகளுக்கு இடையேயும் நல்லுறவு இருப்பதுதான் நன்மை. இந்த முக்கியமான அறிக்கை உருவான இடம், சூழ்நிலை இவற்றையெல்லாம் பார்த்தால் இந்த அறிக்கை நிச்சயமாக நிலைத்திருக்கும். அதிலே இருக்கக்கூடிய கருத்துக்கள் அமலாக்கப்படும் என்பதற்கு உத்திரவாதம் இருப்பதைப் புரிந்துகொள்ளலாம். நம் நாட்டுத் தளபதிகளும், பாகிஸ்தான் நாட்டுத் தளபதிகளும் கூடிப் பேசி இப்பொழுது எடுத்திருக்கக்கூடிய முடிவானது இந்த டாஷ்கண்ட் அறிக்கை எவ்வளவு முக்கியமானது என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது. டாஷ்கண்ட் அறிக்கையின் மூலம் திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுடைய பெயர் சரித்திரத்திலே நிலைத்து நிற்கும் என்று கூறி, அவருக்கு என்னுடைய சார்பிலேயும், என்னுடைய கட்சியின் சார்பிலேயும் அஞ்சலி செலுத்திக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. ர. நல்லசிவம்: கனம் சபாநாயகர் அவர்களே, நமது முதல்வர் அவர்கள் கொண்டு வந்திருக்கக் கூடிய தீர்மானத்தை நான் மனப்பூர்வமாக ஆதரிக்கிறேன். மனிதனுக்கு மிகப் பெரும் பேறு எது என்று கேட்டால் அவன் பிறருக்காக வாழ்வதுதான். வாழ்வது மாத்திரமல்ல, அந்தக் கடமைக்கே அவன் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொள்ளவேண்டும். மிகப் பெருந் தலைவர்கள் எல்லாம் வாழ்ந்து வந்திருக்கக் கூடிய இந்த நாட்டிலே திரு. லால் பகதூர் சாஸ்திரி அவர்களுக்குக் கிடைத்திருக்கக் கூடிய இந்த மகத்தான பேறு வருங்கால சரித்திரத்திலே கூட யாரும் அடைய முடியாத ஒன்று என்று நம்புகிறேன். போர் வீரனுகவும், 3-00 p.m.

அதே சமயத்தில் சமாதான வீரனாகவும் திகழ்ந்த நமது முன்னாள் பிரதம அமைச்சர் அவர்கள் தனது கடமையைச் செய்து கொண்டிருக்கக் கூடிய காலத்திலேயே தனது இன்னுயிரை இந்த நாட்டுக்காக, உலக சமாதானத்திற்காக ஈந்தார்கள் என்பதைக் கேட்கும்போது அது இந்த நாட்டு மக்கள் அத்தனைபேரையும் குலுக்கியது. காந்திஜி காலமானதற்குப் பிறகு இந்த நாட்டிலே உள்ள ஒவ்வொரு குடிமகனுக்கும் தன் வீட்டிலுள்ள ஒருவர் மறைந்து விட்டது போன்ற உணர்ச்சியை சாஸ்திரி அவர்களின் மறைவு ஏற்படுத்தியது. அவரைப் பொருத்தவரையில் அவருக்குப் பாரம்பரியப் பெருமையோ, புராதனப் பெருமையோ கிடையாது. சாதாரணக் குடும்பத்தில் பிறந்த ஒருவர் இந்த நாட்டின் பிரதமராக வந்து சிறந்த முறையில் ஆட்சியை நடத்திக் காட்டினார்கள். அவர்கள் ஜனநாயக ரீதியில் எந்த ஒரு விஷயத்திலும் எதிர்க்கட்சியினரையெல்லாம் கலந்து முடிவு எடுத்தார்கள். அப்பேர்ப்பட்ட தலைவர் மறைந்து விட்டார்கள் என்று சொல்லும்போது உண்மையிலேயே எல்லோரும் பேரதிர்ச்சிக்கு உள்ளானார்கள். அவருடைய இடத்திலே வேறு ஒருவரை தேர்ந்தெடுப்பதன் மூலம் அவருக்கு ஈடுகட்டி விட முடியாது. பண்பு மிகுந்த மாபெரும் பிரதம மந்திரியாக அவர்கள் விளங்கி வந்தார்கள். அவர்களுடைய மதியூகம் நிறைந்த காரியங்கள் என்றைக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கும். அவர்களுடைய குடும்பத்திற்கு அனுதாபம் செலுத்துகின்ற இந்தத் தீர்மானத்தை மனப்பூர்வமாக ஆதரித்து முடித்துக் கொள்கிறேன்.

Sri P. K. MOOKIAH THEVAR rose—

Mr. SPEAKER : Does the hon. Member want to officiate for the Leader of his Party? Can we take it as a convention?

Sri M. KALYANASUNDARAM : When the Leader of a Party is absent, the Hon. Speaker can permit any Member of that Party to speak.

Mr. SPEAKER : We must follow some convention.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து . . .

Sri M. KALYANASUNDARAM : Such a situation arises only on occasions.

Mr. SPEAKER : Yes, only on occasions it will arise.

The hon. Member has already commenced his speech. Let him proceed.

திரு. பி. கே. மூக்கையா தேவர் : கனம் சபாநாயகர் அவர்களே, கனம் முதலமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கும் இந்தத் தீர்மானத்தை ஆதரித்து எங்களுடைய கட்சியின் சார்பில் நமது இந்தியாவின் சுத்த வீரன் திரு. சாஸ்திரி அவர்களது மறைவுக்கு அனுதாபம் தெரிவிக்கும் வகையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல

விரும்புகிறேன். நமது சாஸ்திரி அவர்கள் சுவாமி விவேகானந்தருடைய 'I was born to sacrifice myself at the Mother's altar' என்ற வாக்குக்கு இணங்க வாழ்ந்து காட்டினார். பாரத மாதாவின் காலடியில் தன்னைத் தியாகம் செய்து பாரத தேசத்தின் பெருமையைக் காப்பாற்றுவதற்காகவே பிறந்து இருக்கிறேன் என்று சொல்வதைப் போல், இந்த நாட்டுக்குப் பேராபத்து ஏற்பட்ட காலத்தில் பதவியேற்று பொறுப்போடு பணியாற்றி தன்னையே நாட்டுக்காக இரையாக்கிக் கொண்டார். அவர் பாரத மாதாவின் உத்தம வீரர்களில் ஒருவராகி இருக்கிறார். சுத்தமான இந்தியன் எப்படி இருப்பான் என்பதற்கு இருப்பிடமாக, பிறப்பிடமாக அவர் தோற்றமளித்தார். எதிர்க்கட்சிகளுக்கு மதிப்பளித்து இந்த நாட்டில் ஜனநாயகம் ஓங்க வழி செய்தார். ஏழை விவசாயிக்கு வழி காட்டியாக இருந்தார். அரசியல் ரீதியில், தான் ஒரு கட்சிக்கு மட்டும் சொந்தமல்ல என்பதற்கும் வழிகாட்டியாக இருந்தார். மனச்சாட்சிப்படி எல்லோரையும் மதித்த ஒரே தலைவர் திரு. சாஸ்திரி அவர்களுடைய மறைவு தேசத்திற்குப் பெருத்த நஷ்டம். அவர்களுடைய ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்தித்து முடித்துக் கொள்கிறேன்.

MR. SPEAKER : I fully associate myself with the sentiments expressed by the Leader of the House, the Leader of the Opposition and other Leaders of Parties. I now request the hon. Members to stand in silence for a minute by way of paying homage to the memory of the great Prime Minister.

The resolution was carried *nem con*, all the Members standing in silence for a minute.

MR. SPEAKER : I shall convey the condolence to Mrs. Lalitha Shastri on behalf of the House.

II.—OBITUARY REFERENCE TO DR. HOMI JEHANGIR BHABA AND OTHERS IN AN AIR-MISHAP.

MR. SPEAKER : It is again my painful duty to refer to the air-crash at the snow-clad Mont Blanc near Geneva on Monday, the 24th January 1966 which resulted in the tragic death of 117 persons of whom the great Indian Scientist and Physicist Dr. Homi Jehangir Bhaba was one. Dr. Bhaba was the architect of the atomic energy programme in India. He was a realist and he had the courage and unbounded confidence that, with the necessary encouragement and proper direction, Indian scientists could match their counterparts elsewhere and that India could deservedly take its place among the nuclear nations of the world. At the same time he declared that India was committed to the policy of peaceful uses of the atom in consonance with the traditions of our ancient land. His demise is an irreparable loss to our country, particularly to Madras at this juncture. Our sympathies go to all those who have lost their lives in this tragic accident. I request hon. Members to stand in silence for a minute as a mark of our sorrow and sympathy over this tragic mishap.

The Members stood in silence for a minute.